

# தமிழ் மன்றம்

## ஆண்டு மலர்





**Tamil Mantram e.V.**
**10.02.1990**
**FRANKFURT**

# TAMIL MANTRAM E.V.

Westendstraße 92, 6000 Frankfurt am Main

Advisor: Lawyer Mr. Joachim Lampert

## Executive Committee of Tamil Mantram e.V.:

| | |
|---|---|
| President: | Mr. Sripathy Rodenhaeuser |
| Vice-President: | Mr. Aiyampillai Sornalingam |
| Secretary: | Mr. Balasingam Balasubramaniam |
| Joint Secretary: | Mr. Muthulingam Gunaratnam |
| Treasurer: | Mr. Vajantharajapillai Pathmanathan |
| Assistant Treasurer: | Mr. Thangarajah Krishnathas |
| Auditor: | Mr. Shanmugam Sivasubramaniam |
| Editor: | Mr. Perampalam Thavarajah |
| Sub-Editor: | Mr. Manicavasagar Manoharan |
| Sports: | Mr. Perampalam Balarajah |
| Consultant: | Mr. Sivasubramaniam Kulenthiran |

# வரவேற்பு

தமிழ் மணம் பரப்பும் தன்னிகரில்லாத் தமிழ் மன்றம் நாடி,
தெவிட்டாத தேன் மொழியாய், தித்திக்கும் இன் மொழியாய்,
சங்கத் தமிழர் கட்டிக்காத்த பெரும் பொக்கிஷமாய்த்
திகழும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை
முழுமையாய்ச் சுவைத்திடத் திரண்டிட்ட
தாய்மார்களே, தந்தைமார்களே, நண்பர்களே,
சின்னஞ்சிறு குழந்தைச் செல்வங்களே
உங்கள் அனைவரையும்

வருக, வருக என வரவேற்கின்றோம்.



தமிழ் மன்ற நிர்வாகிகள்

தமிழ் மன்றம்
பிராங்போர்ட்.

# BRIGHTAN

## VIDEO & ASIA SHOP

OESTERMARSCH 37
4600 DORTMUND 1
WEST GERMANY
TEL. 02 31 - 81 94 31

## மன்ற கீதம்

வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்
தமிழ் மன்றம் வளர்த்திட அன்புடன் வாரீர்
தமிழ் வளர்ச்சி பெற்று நாம் திளைத்திட வாரீர்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

தமிழ் மன்றம் ஒன்றினை தொடங்கியே விட்டோம்
எம் மானம் காத்து தமிழினை வளர்ப்போம்
கல்வி கலை கலாச்சாரம் பேணியே காப்போம்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

பிராங்போர்ட் நகரில் தமிழ் மன்றம் அமைத்தோம்
ஜெர்மன் நகரெங்கும் கிளையினை அமைப்போம்
இன்னலுறும் மாணவரை உயர்கல்விக்கு அழைப்போம்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

கற்றவரும் மற்றவரும் போற்றிட வேண்டும்
பல் கலைகள் கற்று நாம் தேறிட வேண்டும்
பிறமொழிகள் பயின்று நாம் வளர்ந்திட வேண்டும்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

நாட்டிய நடனங்கள் சுவைத்திட வேண்டும்
நல்ல பல கவிதையினைச் செவித்திட வேண்டும்
முத்தமிழ் பரப்பி எம்மொழி காத்திட வேண்டும்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

THE BEST SHOP IN FRANKFURT

**RAVINDRA S. DESHPANDE**

***

**KRISHNA INDIAN SHOP**

**SPECIALIST IN GROCERY, VIDEO, MUSIC CASSETTES, MAGAZINES**

Am Hauptbahnhof 8, 6000 Frankfurt / Main 1
Telefon (069) 25 32 11

*********

**ARSD**
**EXPORT - IMPORT**
**PAPIER**
**OBST - GEMÜSE - FISCH**

Gießener Straße 16, 6148 Heppenheim
Telefon (0 62 52) 7 36 55

# தமிழ் மொழி வாழ்த்து.

தான தனத்தன தான தனத்தன தான தந்தான

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமை!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

# NUCREATION

Welcomes you to a Gracious World of
Elegant Sarees, Salwar Kameez and Fabrics



**NUCREATION EXPORT GMBH**

Baseler Strasse 48 · D-6000 Frankfurt am Main 1
Telephone (0 69) 25 26 67



Ev.-luth. Weißfrauengemeinde

Liebe Mitglieder von Tamil-Mantram!

Sie feiern im Jahre 1990 das 1jährige Bestehen Ihres Vereins. Mit Stolz können Sie dieses Jubiläum miteinander begehen, denn Sie haben in den vergangenen Jahren viel Engagement, Zeit und guten Willen eingebracht, um hier in Frankfurt Ihre Kultur zu pflegen, sich miteinander auszutauschen und zur persönlichen Begegnung von Menschen beizutragen. Als Pfarrer der evangelisch-lutherischen Weißfrauengemeinde, in deren RäumenSie sich regelmäßig treffen, beglückwünsche ich Sie herzlich zu Ihrem Fest.

Die Menschen in der Stadt Frankfurt und besonders wir, die Bewohnerinnen und Bewohner des Bahnhofsviertels, leben in einer Umgebung, die längst nicht mehr von einer Kultur oder einer Tradition allein bestimmt wird. Diese "multikulturelle Gesellschaft", in der sich Menschen aus der ganzen Welt mit ihrer je eigenen Sprache, Geschichte, Religion oder Kultur begegnen, bietet die Chancen, über alle Grenzen hinweg voneinander zu lernen und gemeinsam zum Wohle aller beizutragen. Dabei soll die jeweils eigene Identität nicht aufgegeben werden, sondern durch die Begegnung und das Kennenlernen "anderer" die eigene Erfahrung bereichert und ein friedliches Miteinanderleben in guter Nachbarschaft erreicht werden.

Wir als eine evangelische Kirchengemeinde freuen uns, wenn Sie sich bei uns wohlfühlen können. Möge unsere gute Zusammenarbeit auch in Zukunft vom guten Willen getragen sein, ein Zeichen dafür zu setzen, daß Menschen in Frieden und als gute Nachbarn miteinander leben können - woher auch immer sie kommen und welche Sprache sie sprechen mögen.

# MAHARANI
## Indisches Gewürzhaus

**FOR ALL IN YOUR FAMILY**

22 K Gold ornaments (with guarantee).
Readymade wears and sarees – Grocery,
fresh vegetables video cassettes & CDs.

**FIRST & BEST INDIAN SHOP IN FRANKFURT**

Kaiserstrasse 50 / III. Stock · D-6000 Frankfurt am Main 1
Telephone (0 69) 23 47 76

Caritasverband Frankfurt e.V.
- Sozialdienst für ausländische Flüchtlinge -

Alte Mainzer Gasse 10

6000 Frankfurt

2. Februar 1990

Liebe tamilische Mitbürger,

vor etwa einem Jahr hat sich Ihr tamilischer Kulturverein "Tamil Mantram e.V." gegründet. Jetzt feiern Sie Ihren ersten Geburtstag, zu dem ich Ihnen im Namen des Caritasverbandes ganz herzlich gratuliere.
Ich wünsche Ihnen, daß die Mitgliederzahl Ihres Vereins weiter wächst, und Sie damit möglichst vielen Ihrer Landsleute die hier im Exil leben, ein wenig Heimat bieten können.
Ganz besonders wichtig ist dies für Ihre Kinder, die durch Sie ihre Muttersprache bewahren können, und denen Sie vor allem Ihre Kultur weitergeben können.

Ihrer so wichtigen Arbeit wünsche ich daher ein gutes Gelingen.

i.A. Marianne Klauer
(Marianne Klauer)
- Sozialdienst für ausländische Flüchtlinge -

## தமிழ் மன்றம் தளைத் தோங்கிட எமது வாழ்த்துக்கள்!

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், பானங்கள், பாத்திரங்கள், உடைகள் மற்றும் தமிழ், சிங்களம், மலையாளம், இந்தி மொழிகளிலான பாடல் கசெட்டுகள், படக் கசெட்டுகள் போன்றவற்றை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது இதர போக்கு வரத்துச் சாதனங்கள் மார்க்கமாகவோ மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் கொள்வனவு செய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

ஓடர்கள் நேரவரையறை இன்றி ஏற்றுக்கொள்ளப்படும்.

*SELFREI IMPEX*
*GOTENSTR. 42*
*6230 FRANKFURT 80*
*TEL. 069 - 318619*
*FAX. 069 - 331604*



Sripathy Rodenhaeuser
Praesident des
Tamil Mantram e.V.,
Frankfurt a.M.

Aus Anlass unserer Feier zum 1. Jahrestag von Tamil Mantram moechte ich im Namen von Tamil Mantram die herzlichsten Gruesse und besten Wuensche an Sie alle richten.

Beginnend mit Slogans, welchen wir mit vielen guten Motiven eine praktische Form gaben, war es der einzig richtige Weg zur Ausfuerung unserer Plaene.

Wenn wir genau darueber nachdenken, werden wir herausfinden, dass Leistungen und Erfolge nur zu verwirklichen sind durch harte Arbeit und tiefe Verbundenheit zur Sache, was auch immer diese Sache mag.

Aus diesem Grund sind wir sehr stolz darauf Mitglieder von Tamil Mantram zu sein.

Unser Verein moechte Kontakte zur tamilischen Kultur der ganzen Welt herstellen, Kulturpflege betreiben und Studenten der Universitaeten behilflich sein.

Um hier erfolgreich zu sein, benoetigen wir auch weiterhin Ihre volle Unterstuetzung und Kooperation.

Hierfuer bitte ich im Namen von Tamil Mantram.

Sripathy Rodenhaeuser

உங்களுக்கு தேவையான புதிய திரைப்பட

வீடியோ ஓடியோ கசெட்டுக்களை

உடனுக்குடன் தருபவர்

ஆர் . எஸ் . பி . வீடியோ

**R · S · P · VIDEO**

HEISTER KAMP-9 , 4620 CASTROP

TEL: 02305 33193

தலைவர்
தமிழ் மன்றம்

## அன்பு நெஞ்சங்களே!

இன்று தமிழ் மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா வைபவத்தில் எனது உளம் கனிந்த இனிய நல்வாழ்த்துக்களை மன்றத்தின் சார்பில் உங்கள் அனைவருக்கும் மனமார தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பேச்சால் ஆரம்பித்து பின்னர், தரமான நெறி முறைகளை முன் வைத்து அயராது கடுமையாக செயல்படுத்துவதால் மட்டுமே ஒரு குறிக் கோளை அடையலாம்.

இந்த குறிக்கோளை அடைவதற்கு, எவ்வளவோ இடையூறுகளின் மத்தியில் எண்ணற்ற சேவைகளும், மகா தியாகங்களும் இடம் பெற்றுள்ளன என்பதனை ஆழமாக ஆராய்வதன் மூலம் தான் அறிய முடியும். இதனையிட்டு இத் தமிழ், மன்றத்தின் அங்கத்தவர்களாகிய நாம் ஒவ்வொவரும் பெருமைப் படக் கூடியவர்களாக இருக்கின்றோம்.

இம் மன்றத்தின் நோக்கங்களாகிய உலகத் தமிழர் தொடர்பு, கலை வளர்ச்சி, பல்கலைக் கழக மாணவர் உதவி என்பவற்றை மேலோங்கி வளர்ப்பதற்கு தங்கள் அனைவரினதும் அன்பான ஒத்துழைப்பையும் விலைமதிப்பற்ற பங்கு பற்றுதல்களையும் தொடர்ந்தும் நல்கு மாறு உங்கள் அனைவரையும் மன்றத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

வணக்கம்

வாழ்க தமிழ்!

பெருக அறிவு!!

ஒப்பம்
சிறீபதி

THE BEST AND FIRST SHOP IN FRANKFURT

# INDIAN CORNER

* LEBENSMITTEL

* VIDEOTHEK

* REISEBÜRO

NEETU MARWAHA
WESERSTRASSE 11

**6000 FRANKFURT / MAIN 1**

Telefon: 069 / 25 32 01
069 / 25 15 81

## தமிழ் மன்றமும், பன்னாட்டுத் தமிழுறவு மன்றமும்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தலைமையகம் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இம் மன்றத்தின் உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்கள் எமது தமிழ் மன்றத்திற்கு அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியின் சுருக்கம் பின்வருமாறு:

"மேற்கு ஜேர்மன் பிராங்போர்ட் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் சிறிபதி அவர்களின் தலைமையில் ஒருங்கிணைந்து தமிழ் மன்றம் அமைத்து தமிழர்கள் ஒருங்கிணைந்த செயலாக்கம் காண்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றோம். உலகத் தமிழர் உதிரிகளாக இருக்கும் வரை ஏதும் பயனில்லை. நமக்குள் இருக்கும் வேறுபாடுகளை அறுத்து ஒருங்கிணைய வேண்டும். தமிழனுக்கென்று ஒரு நாடில்லாத வரை தமிழன் தாயில்லாப் பிள்ளையாகவே உலக அரங்கில் கருதப்படுவான். எமக்கென்றோர் நாடு உருவாக்கும் கட்டத்தை நாம் எய்த வேண்டும். ஜேர்மன் பிராங்போர்ட் தமிழ் மன்றம் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் ஒரு அங்கமாகவே நினைத்து எங்களால் ஆன எல்லா ஒத்துழைப்பும் என்றும் உங்களுக்கு உண்டு. -வாழிய தமிழ் மன்றம்! வாழிய வையத் தமிழர்!!

திறமார்ந்த ஆற்றல் காண்போம்
செயல் வீரம் பெருக்கி வெல்வோம்
அறமார்ந்த எண்ணம் வெல்வோம்
அயராமல் உழைத்து உயர்வோம்
வையம் உறவாகும் தமிழர் சேர்க்கை
உறுதியில் இளமையாம் நெஞ்சம்
பிறர் வாழ வாழ்வோம் - ஆனால்
பிறருக்கு நாம் அடிமை அல்லோம்
ஈழ நற் தமிழர் நாட்டை
ஏற்படுத்திடும் நல் வாய்ப்பை
ஆழமாய்ச் செய்திடுவோம் - நம்முள்
அறியாமை ஒற்றுமையில்
தாழச் செய் தீய்மை சாய்ப்போம்
தவத் தமிழ் ஒருமை காண்போம்
வாழிய ஜேர்மன் தமிழ் மன்றம்
வளர்கவே! ஓங்கி வெல்கவே.

அன்பன்

ஒப்பம் - வா. மு. சேதுராமன்.

# ஆண்டறிக்கை 1989

கொட்டும் பனித்திருநாளாம் 1988-ஆம் வருடம் மார்கழி பத்தில் கொஞ்சி மகிழ்ந்திட மழலை இல்லையெனப் பலரும் ஏங்கிட பிறந்தான் மழலை அவன் கன்னித் தமிழ் வளர்த்திட. ஈன்றாள் தமிழ்த் தாய் தன் மழலைச் செல்வத்தை ஜேர்மன் நாட்டின் மாபெரும் நகராம் பிராங்பேர்ட்டில். அழியாத் தமிழுக்கு அரவணைப்புக் கொடுக்கக் கூடிட்டார் இந் நகர் வாழ் நன் மக்கள் எல்லோரும். முகர்ந்திட்டார் தமிழ் மணம், பரப்பிட்டார் எம்மொழி செவித்திட்டார் பல் சுவைகள், ரசித்திட்டார், மனதார வாழ்த்தி வளர்த்திட்டார்.

வளர்ந்தான் தமிழ் மகன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய். அன்று மழலையாய் பிறந்தவன் சிரித்து, தவழ்ந்து, இப்போது தள்ளாடி நடக்கவே ஆரம்பித்துவிட்டான். இதோ உங்கள் கைகளின் அரவணைப்புக்கு நடந்தே வந்துவிட்டான். ஆமாம் ஓராண்டு பூர்த்தியாகி ஆண்டு மலராக உங்கள் மத்தியில் மலர்ந்திருக்கின்றான் உங்கள் மகன். குழந்தையாய் இருந்து வளர்ந்திட்ட தம் மக்களின் சிறு குறும்புகளைப் பேசி மகிழ்வது பெற்றோரின் இயல்பு தானே. இதோ நாம் ஏறிவந்த படிகளை மீண்டுமோர் தடவை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியும், பேரானந்தமும் அடைகின்றோம்.

தரணியில் தமிழ் மொழி அழிவதைத் தன் மானத் தமிழன் எவனுமே பொறுத்திரான். ஜேர்மன் நகரில் தமிழ் மக்கள் படும் இன்னல்களைக் களைத்தெறிய தமிழுக்கு ஓர் மன்றம் வேண்டுமெனச் சிந்தித்தோர் பலர். செயலில் இறங்க வழி தெரியாது தத்தளித்தோர் சிலர். இவ்வேளையில் துணிந்தான் ஓர் தமிழ் மகன். அழைத்தான் தன் இனிய நண்பர்களை. அமைத்தான் தமிழுக்கு ஓர் மன்றம். அவன் தான் எமது மன்றத்தின் தலைவன் திரு சிவனடியான் சிறீபதி என்னும் இனிய நண்பன், கனிமொழியும், கட்டுப் பாடும், கடமையுணர் வும் கொண்ட தலைவனாய்-எம் எல்லோராலும் பாராட்டப்பட்டு சிறப்புற வழி நடாத்தி வருகின்றான் எம் மன்றத்தினை.

தலைவர் திரு. சிறீபதி அவர்களின் சேவையும், மற்றைய நிர்வாகிகளின் அயராத உழைப்புமே இன்று உங்கள் கைகளில் மலர்ந்திருக்கும் ஆண்டுமலராகும். நீங்கள் காதால் செவித்து, கண்ணால் பார்த்து, வாயால் வாழ்த்திய இனிய நிகழ்ச்சிகளை இன்று அச்சுருவில்

எழுத்தால் சமர்ப்பிக்கும் பொழுது எம் உள்ளம் பூரிப்படைகின்றது. எம்முடன் சேர்ந்து உங்கள் உள்ளங்களும் பூரிப்படைவதை கண்ணூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சாதி மத பேதமோ, அரசியல் கலப்போ, வியாபார நோக்கமோ இன்றி இனிய தமிழினைப் பரப்பிடப் பிறந்த உங்கள் தமிழ் மன்றம் தனது முக்கிய நோக்கமாக உலகில் சிதறிக்கிடக்கும் தமிழ் மக்களை ஒன்று சேர்த்து இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வளர்ச்சியை ஊக்குவிப்பதும் நம் தாய்த்திருநாடாம் ஈழவளநாட்டில் அரசியல் கலவரத்தால் மேற்படிப்பைத் தொடரமுடியாது தவிக்கும் எம் தமிழ் மாணவர்கட்கு பல்கலைக்கழகப் படிப்பை ஜேர்மன் நகரில் தொடருவதற்கு வேண்டிய உதவிகளை "மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை" என்ற ஓர் அமைப்பின் தொடர்புடன் வழி நடத்தலும், மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு எந்தெந்த வழிகளில் எம்மால் உதவ முடியுமோ அவ்வழிகளில் எல்லாம் முன்னின்று உதவுதலையும் குறிக்கோளாகக் கொண்டு தனது சேவையை உங்கள் முன் அர்ப்பணித்துப் பணிபுரிந்து வருகின்றது.

தமிழ் என்ற பெரு விருட்சத்தில் பூத்து, காய்த்து, கனிந்திட்ட எம் மக்கள் மத்தியில் இலைமறைகாயாய் மறைந்து கிடக்கும் கலைஞர்களை இயன்றவரை அழைத்து அவர்களின் திறமைகளை உங்கள் மத்தியில் வெளிக்காட்டிய பெருமை எம் மன்றத்தையே சாரும். அது மட்டுமன்றி சின்னஞ்சிறு குழந்தைச் செல்வங்களை ஒன்றிணைத்து அவர்களின் மழலைத் தமிழைச் செவித்திடவும், மகிழ்வூட்டும் பாடல்கள், நடனங்களைக் கண்டு களிப்புறவும் செய்த பெருமை மன்ற உறுப்பினர்களாகிய திருமதிகள் நளாயினி குணரட்ணம், சுகிர்தராணி நித்தியானந்தன் அவர்கட்கே உரித்தாகும்.

"துள்ளித் திரிகின்ற வயதினிலே என் துடுக்கு அடக்கிப் பள்ளிக்கு வைத்தான் இல்லையே பஞ்சமா பாதகனாகிய என் தந்தையே" என்று எம் குழந்தைச் செல்வங்கள் எம்மை வைவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காது, எம் குழந்தைச் செல்வங்கள் எம் மொழியின் அரிச்சுவடைக் கற்று, சிறந்த கல்விமானாகத் திகழ எம் மன்றத்தால் தமிழ் ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதற்கு ஓர் பாடசாலை வாரத்தில் ஓர் நாள் நடாத்தப்பட்டு வருவது உங்களுக்குத் தெரிந்ததே. சிறந்த தமிழ் அறிவும், குழந்தைகளுடன் கனிவாகப் பேசும் பண்பும், பெண்களுக்கே உரிய பொறுமை எனும் நகையும் அணிந்த திருமதி. கமலா கனகசபை அவர்கள் எம் மன்றத்தின் சிறுவர் பாடசாலைக்கு ஆசிரியையாகக் கிடைத்தமை ஓர் பெரும் பொக்கிஷமாகவே நாம் கருத வேண்டும். அவரின் சேவைக்கு நாம்

எல்லோரும் என்றும் கடமைப்பட்டவர்களாகவே உள்ளோம்.

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கமைய நாம் அந்நிய நாட்டில் வாழ்ந்திட்ட போதிலும் அந் நாட்டின் மொழியினைப் பயிலாது பல இன்னல்களுக்கு ஆளாகி வந்த உண்மை எம் மக்கள் மத்தியில் பெருங் குறையாக நிலவி வந்தது. இந் நிலையை மாற்றி இந் நகர் வாழ் தமிழ் மக்கள் ஜேர்மன் மொழியினைப் பயில்வதற்கு சிறந்த அறிவும், கல்வி ஞானமும், இலகுவாக ஜேர்மன் மொழியைப் புகட்டும் தன்மையுங் கொண்ட எம் மன்ற உறுப்பினரும், ஜேர்மன் பல்கலைக்கழக மாணவருமாகிய திரு. கனகசபை ரவீந்திரன் அவர்களை நியமித்து இந் நகர் வாழ் சகல தமிழ் மக்களும் ஜேர்மன் மொழியில் தேர்ச்சிபெற வாய்ப்பளித்து வருவதும் நீங்கள் அனைவரும் அறிந்ததே.

இக் கல்விச் சேவைகளை சிறப்புற நடாத்த எமக்கு ஓர் இடம் இல்லையே என நாம் தவித்த நேரத்தில் திரு. பேரம்பலம் பாலராஜா அவர்களின் பெரு முயற்சியினால் "ஹரிதாஸ்" என்னும் நிறுவனத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக ஓர் சிறந்த இடத்தை ஒழுங்கு செய்து அதில் இன்றும் எம் குழந்தைச் செல்வங்களும், பெற்றோரும் கல்விகற்று வரக்கூடியதாக உள்ளது.

இம் மன்றத்தின் படிமுறை வளர்ச்சிக்கு உங்களால் தெரிவு செய்யப்பட்ட இந் நிர்வாக சபை முக்கிய அங்கம் வகிப்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. மன்றத்தின் வளர்ச்சியிலும், மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், செயல் திட்டங்களை வகுத்து சிறப்புற வழி நடாத்துவதிலும், சிறந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து உங்கள் முன் சமர்ப்பிப்பதிலும் அயராது உழைத்து வருகிறது. எமது நிர்வாக சபை மாதமொருமுறை கூட்டப்பட்டு மன்றத்தின் வளர்ச்சி சம்பந்தமாக பல செயல் திட்டங்களைத் தீட்டுவதிலும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய பல ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதிலும், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை உங்கள் மத்தியில் இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழ் அங்கங்கள் கொண்ட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தும், மற்றும் விசேட நிகழ்ச்சிகளையும் உங்களுக்கு வழங்கி வந்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் எம்மால் உங்கள் மத்தியில் ஐந்து கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுப் பாராட்டைப் பெற்றது. இதனை விட வாணி விழா நாதஸ்வரக் கச்சேரி, சினிமாப் படக் காட்சி போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டிருக்கின்றன.

இதில் சிறப்பு அம்சமாகவும் பெருமைப்படக்கூடிய ஒரு விடயமாகவும் அமைந்தது எமது மன்றத்தின் "இசைக் குழு" ஆகும்.

இந்த இசைக்குழுவை ஒருங்கமைத்து, சிறந்த இசைக் கருவிகளை மீட்டு நல்லிசை வழங்க எம் இசைக்குழுவினர் பல இடுக்கண் மத்தியிலும் நல்ல பயிற்சி பெற்று உங்கள் செவிகளில் நல்லுணர்வு ஊட்டுவதுடன் மேலும் பல கலைஞர்களை இசை உலகில் காலடி எடுத்து வைக்க வழி நடாத்தி வருவது பெருமைப்படக் கூடிய ஒன்றாகும். இந்த இசைக்குழுவின் முன்னோடிகளான திருவாளர்கள் சொர்ணலிங்கம், கேசவன், குணரட்ணம் ஆகியோருடன் பின்னனிப் பாடகியாக திருமதி வனஜா அவர்களும் இணைந்திருந்து வருவது யாவரும் அறிந்ததே.

எமது மன்றம் கூடியவரை எமது மன்ற உறுப்பினர்களைக் கொண்ட நிகழ்சசிகளை நடாத்தி உங்களைக் களிப்புறச் செய்து எமது பொருளாதார வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்துள்ளது. இருப்பினும் ஒரு சில நல்ல நிகழ்ச்சிகளைப் பல நெருக்கடிகள் மத்தியில் உங்களின் மகிழ்ச்சிக்காக அவற்றினை ஒழுங்கு செய்து வந்துள்ளது. இவற்றுள் திரு. கமலபாதம் அவர்களின் நாட்டிய நடனமும், திருமதி சவி அவர்களின் இலந்தைப் பழப்பாடல் நடனமும், பலகுரல் மன்னன் திரு. நாசர் அவர்களின் நிகழ்ச்சியும், திரு. சான்னி-தட்டில் அவர்களின் நிகழ்ச்சியும், "வாணி நர்த்தனாலயம்" நடாத்திய பரதநாட்டிய நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கவை.

எமது மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆறு நிகழ்ச்சிகளில் சிலவற்றைக் குறிப்பிட்டு எழுதுவதில் எம் உள்ளம் களிப்புறுகின்றது. அதில் விசேடமாக சிறுவர் நிகழ்ச்சியில் எம் எல்லோரையுமே வியப்பில் ஆழ்த்திய செல்வி நதிகா சிவானந்தனின் பரதநாட்டியம் குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து மற்றைய நிகழ்ச்சிகளில் செல்விகள் சஞ்ஜீதா, துர்க்கா, சிந்துஜா, கிளவுடியா, சிரிசாந்தி, நிசானி, மிருதுலா, சுகந்தி ஆகியோருடன் செல்வர்கள் ரங்கன், நிரஞ்சன்,ரூபன், ரஜீவா அவர்களின் நடன, பாட்டு நிகழ்ச்சிகளும் பாராட்டைப் பெற்றன. நாடக அரங்கில் எமது கன்னிப் படைப்பான ஈழம் வாழ் திரு. V.T.A. விஸ்வா அவர்களின் "விதியின் விழிம்பில்" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் எமது மன்றத்தில் அரங்கேற்றப்பட்டு பல இளம் நடிகர்களை எம் மன்றத்திற்கும், உங்களுக்கும் அறிமுகப்படுத்தி உள்ளது பெருமைப்படக் கூடிய ஒன்றாகும். இதைத் தொடர்ந்து மேலும் பல நாடகங்களை உங்கள் மத்தியில் அரங்கேற்றுவதற்குப் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

எம் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட கிறில் (GRILL) பாட்டியின் போது சிறுவர்களுக்கு சிறந்த விளையாட்டு போட்டிகளைப் ஒழுங்கு செய்து, பரிசில்கள் வழங்கி சிறுவர்கள் மத்தியில்

ஊக்கத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த வழி செய்துள்ளது. அத்துடன் பெரியவர்களுக்கான கிரிக்கட் போட்டியை நடாத்தியதின் மூலம் பெரியவர்களுக்கும் கூட விளையாட்டுத்துறையில் நாட்டத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும் பல தரப்பட்ட விளையாட்டுத் துறைகளை ஆரம்பிப்பதற்கு எமது மன்றம் ஆவன செய்து வருகின்றது.

எமது மன்றத்தின் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் போன்று காட்சி அளிப்பது சேகர் அவர்களின் ஓவியத் திறனே என்று கூறிக்கொள்வதில் தமிழ் மன்றம் பெருமையடைகின்றது. எமது மன்றத்தின் சகல சித்திர வேலைகளையும், அழிகிய எழுத்து வேலைகளையும் எமக்கு வரைந்து தந்து மன்ற நிகழ்ச்சிகளை மெருகடையச் செய்து வரும் செல்வன் சேகர் அவர்களைப் பாராட்டுவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

எந்த ஒரு மன்றமாக இருப்பினும் அதன் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் முக்கிய ஊன்று கோலாக இருப்பது பணம். இதில் நாம் விதி விலக்காக முடியாது. எமது மன்றத்தின் பண நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு எம் மன்ற நிர்வாக சபையின் செயல் திட்டத் திறனால் எமது மன்றத்தின் நிகழ்ச்சிகளின்போது ஓர் சிற்றுண்டிச் சாலையை அமைத்து வருகிறது. அதில் விற்பனை செய்யப்படும் சகல சிற்றுண்டி வகைகளும் எமது மன்ற அங்கத்தவர்களினால் தயாரித்து இலவசமாக வழங்கப்படுவதினால் அதனை விற்பனை செய்த பணத்தின் மூலம் பொருளாதார நிலைமையைச் சீரடையச் செய்து வருகிறது. மன்ற அங்கத்தினரின் சேவை எல்லோராலும் பாராட்டப்படக் கூடிய ஒன்றாகும். இவர்கள் பல இன்னல்கள் மத்தியிலும் எமது மன்றத்திற்கு அளித்து வரும் சேவை எம் மன்றத்தின் வளர்ச்சியின் படிக்கற்கள் ஆகும்.

தலைவர் சிறீபதி அவர்கள் மன்றத்தின் தலைவராக இருந்து செயற்படுவது மட்டுமன்றி தனக்குத் தெரிந்த கலையான "மாயாஜால" வித்தைகளை பிற இடங்களிலும், நாடுகளிலும் செய்து காட்டுவதன் மூலம் கிடைக்கும் அன்பளிப்பை இரண்டு வருடங்களுக்கு தமிழ் மன்றத்திற்கே செலுத்தி வருவதாக உறுதிமொழி வழங்கி அதனை செயற்படுத்தி வருவதும் நமக்கெல்லாம் மட்டில்லாத ஆனந்தத்தை அளிக்கிறது.

மேலும் மன்ற அங்கத்தினராலும், பிறவெளித் தமிழராலும், சின்னஞ் சிறு குழந்தைகளினாலும் எம் மத்தியில் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அவர்களின் திறமைக்கு மன்றத்தின் சார்பாக நற்சான்றிதழ்களை வழங்கி அவர்களின் கலைத்திறனை ஊக்குவித்தும் வந்துள்ளோம். மன்றத்தின் வளர்ச்சியையும், சிறந்த கலை

நிகழ்ச்சிகளையும் கண்ணுற்ற எம் மக்கள் சிறு பரிசுப்பொருட்களை மன்றத்திற்கு வழங்கி போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு கொடுக்கச் செய்தமை எமது வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். வளர்ந்துவிட்டோம் என்று தற்பெருமை கொள்ளாது உங்கள் மத்தியில் இருந்து விமர்சனங்களையும், அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் பெற்று எமது மன்றம் மேலும் சிறப்புடன் வளர வழி செய்தும் வருகின்றோம்.

கடந்த ஓராண்டு காலத்தில் எம் மன்றத்தால் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி சிறப்பான நிகழ்ச்சிகளை நடாத்தியது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. எதிர் வரும் ஆண்டுகளிலும் மேலும் சிறப்பான நிகழ்ச்சிகளை அளிப்பதற்கு எமது நிர்வாக சபை பல செயல் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. எமது இரண்டாவது சிறப்பு மலர் உங்கள் மத்தியில் அதிக இதழ்களுடனும், அதிக உள்ளடக்கத்துடனும் மலர உங்கள் எல்லோரினதும் ஆசிகளையும், ஆதரவையும் எதிர்நோக்கிக் காத்திருப்பதுடன் இவ் அறிக்கையைச் சமர்ப்பிப்பதிலும் பெருமை அடைகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்,

பிராங்பேர்ட் 10-02-1990

இணைச் செயலாளர்கள், தமிழ் மன்றம்.


ஒப்பம் பா. பாலசுப்பிரமணியம்

மு. குணரட்ணம்

# SIS
## RENT A CAR

**OPEN**
**SEVEN DAYS**
**A WEEK**

- ✦ Brand new Cars
- ✦ Free unlimited mileage
- ✦ 15 Different models at your choice




**BP GAS STATION**

✦ Car Repairs ✦ ASU Test
✦ Wash & Clean ✦ Gasoline Service

TELEPHONE [069] 694441.
TELEFAX: 694442.

## UNSER VEREIN TAMIL MANTRAM

Tamil Mantram hat sich zum Ziel gesetzt, die in der Bundesrepublik in Frankfurt und seiner Umgebung lebenden Tamilen gesellschaftlich und kulturell zu integrieren. Unser Verein besteht seit 1988. Die anfanglich geringe Zahl von Mitgliedern ist seitdem beständig angewachsen, so daß heute ein großer Kreis von Aktiven in "Tamil Mantram" tätig ist.

Eine Vielfalt von Aktivitäten kennzeichnet unseren Verein:
Verschiedene Kulturprogramme, Sprachkurse, Sport, Kunst und studentische Unterstutzung. Darüber hinaus hat "Tamil Mantram" für seine kleineren Mitglieder einen eigenen Kindergarten eingerichtet.

"Tamil Mantram" arbeitet erfolgreich mit W.GUTSS (West. German University Tamil Students Service), der die in der Bundesrepublik neu ankommenden tamilischen Studenten in ihren Anfangsmonaten in der für sie fremden Umgebung unterstützt.

Von Zeit zu Zeit treffen wir uns zu Sportaktivitäten, Festen und Gesprachen, um uns besser kennenzulernen und Erfahrungen auszutauschen. Im vergangenen Jahr organisierten wir unter anderem eine Grillparty und "Cricket Matches".

Unser Jubilaum feiern wir am 10.Februar 1990.

TAMIL MANTRAM

விநோத உடைப் போட்டி
பேச்சுப் போட்டி
பாட்டுப் போட்டி



பரத நாட்டியம் - செல்வி நதிகா

# நிகழ்ச்சி நிரல்

இறை வணக்கம்
தமிழ் மொழி வாழ்த்து
மன்ற கீதம்
தலைவர் உரை
வரவேற்புரை
சிறப்புரை- திரு. குமரன் அவர்கள்
ஆண்டறிக்கை வாசித்தல்
பரத நாட்டியம் - செல்வி நதிகா
சிறுவர் நிகழ்ச்சி - பங்கு பற்றுவோர்

செல்விகள்:

சஞ்ஜீதா
சனிஷ்யா
சிந்தியா
சுகந்தி
சுஜாதா
துர்க்கா
கிரிசாந்தி
நிசானி
யெசிந்தா
ஜெயசித்திரா

செல்வன்:

துவாரகன்


பரிசளிப்பு

## இடை வேளை

இன்னிசை - தமிழ் மன்ற இசைக்குழு
பாட்டுக்குப் பாட்டு
ஒலியும் ஒளியும்
கவியரங்கம்
நாடகம் - "வெளி நாட்டு மருமகள்"
நன்றியுரை

19.08.1987 இல் தமிழ் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "கிறில்" பாட்டியின் போது சிறுவர்களுக்காக நடைபெற்ற தடையோட்டப் போட்டியின் ஒரு பகுதியும், மன்ற கலை நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற மழலையர் பூங்காவின் நிகழ்ச்சிகளும்.





# தமிழ் மன்ற அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

முதற் பெயர்:-

குடும்பப் பெயர்:-

வீதி:-

நகரம்:-

நாடு:-

தொலைபேசி இலக்கம்:-

நான் / நாம் மேற்படி தமிழ் மன்றத்தில் அங்கத்தவராக இருக்கச் சம்மதிப்பதுடன் மன்றக் கோட்பாடுகளுக்கு இணங்கி மன்றத்தை சிறந்த முறையில் வழி நடத்தச் சம்மதிக்கிறேன் / றோம்.

வருடச் சந்தா 20.00 மார்க் (இருபது மார்க்)

........................ ..............................................

திகதி கையொப்பம்

*15.04.1989 இல் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற திருநெல்வேலி V.T.A. விசுவாவின் "விதியின் விழிம்பில்" எனும் சமூக சீர் திருத்த நாடகத்தின் இரு காட்சிகள்.*






# மேற்கு ஜெர்மன் தமிழ் மன்றச் செயலாளர் பாலசுப்பிரமணியம் பேட்டி.

**சிங்கப்பூரில் மேற்கு ஜெர்மனியின் பிரான்க்பர்ட் நகரில் உள்ள தமிழ் மன்றம் அங்கு வாழும் தமிழரிடையே தமிழ் உணர்வை வளர்த்து வருகிறது. அம்மன்றத்தின் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் சிங்கப்பூர் வந்திருந்தபோது தமிழ் முரசுக்குப் பேட்டி அளித்தார்.**

பிராங்பர்ட் தமிழ் மன்றம் கடந்த ஆண்டு டிசம்பர் பத்தாம் தேதி அமைந்தது. அதில் மொத்தம் முன்னூறு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இருபத்து ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபை இருக்கிறது. திரு. சிறீபதி அதில் தலைவராக சேவை புரிகிறார்.

## நோக்கம்

எங்கள் தலையாய நோக்கம் அங்குள்ள தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்க் கல்வி போதிப்பது. அது தவிர்த்துப் பெரியவர்களுக்கும் ஜெர்மன் கற்பிக்கும் பணியையும் மேற்கொள்கிறோம்.

தமிழ் இலக்கியம் கலை கலாச்சாரம் எங்களோடு நின்று எங்களை வழி நடத்த வேண்டும் என்று நாங்கள் பிரையாசப்பட்டு அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். தமிழ் மன்றம் சாதி, மத, பேதம் இல்லாத, அரசியல், வியாபார நோக்கம் கலக்காத மொழியின் மீது தாகம் கொண்ட கழகமாக செயலாற்றுகிறது.

## இளைய தலைமுறை

நாங்கள் நடத்துகிற வகுப்பு, போடுகிற நிகழ்ச்சி அனைத்திலும் குழந்தைகள், இளைய தலைமுறை பற்றிய சிந்தனையே மேலோங்கி நிற்கும்.

சுமார் மூன்று வயது தொடங்கி வளரும் பருவத்தில் உள்ள குழந்தைகளிடம் தமிழுடன் உயர்ந்த சிந்தனையைக் காப்பாற்ற நாங்கள் முயற்சிகள் செய்கிறோம்.

எங்களது முயற்சிகளைப் புரிந்து கொண்டு பிரான்க்பர்ட் நகரிலும் சுற்று வட்டாரத்திலும் உள்ள மக்கள் மகிழ்ச்சிகரமான ஆதரவை வழங்குகிறார்கள்.

## நாடகம்

தமிழ் ஜெர்மன் மொழி வகுப்புக்கள் தவிர்த்து அங்கே பரத நாட்டிய வகுப்பும் நடக்கிறது. தொடக்கத்தில் இந்த வகுப்புக்களில் சேர ஆள் தேடி அலைய வேண்டி இருந்தது. இப்போது படிக்க வருவோருக்குப் போதுமான பெரிய இடம் இல்லையே என்று யோசிக்கும் நிலை வந்திருக்கிறது.


திரு. பாலசுப்பிரமணியம்

தமிழர்கள் அனைவரையும் ஒன்று கூட்டும் யற்சியாக நாங்கள் இசைநிகழ்ச் சிகளும், நாடகங்களும் அரங்கேற்றுகிறோம்.

விதியின் விளிம்பில் என்ற பாலராஜாவின் நாடகம் அண்மையில் அமோக வரவேற்பைப் பெற்றது. பிரான்க்போர்ட்டில் உள்ள தமிழ் மக்கள் தொகையே இருநூறு தான்.

ஆனால் அந்தச் சீர்திருத்த நாடகத்துக்கு முன்னூற்று ஐம்பது பேர் வந்திருந்தார்கள்.

தமிழர்கள் தவிர்த்து ஜெர்மனியர்களும் எங்களது தமிழ் நிகழ்ச்சிகளுக்கு வந்து ஆதரவும் வழங்குகிறார்கள்.

## இலவசக் கல்வி

ஹரிதாஸ் என்ற அமைப்பு எங்களுக்குப் பல வகையிலும் உதவிக்கரம் நீட்டுகிறது. மொழி வகுப்புக்கள் நடத்த இடம் ஒதுக்கித் தந்திருக்கிறது. திரு. ரவீந்திரன் கனகசபை ஜெர்மன் மொழியும், திருமதி கமலா கனகசபை தமிழ் மொழிப் பாடமும் இலவசமாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதற்குரிய இடத்தை ஹரிதாஸ் அமைப்பு வழங்கி

எங்கள் பணியை எளிதாக்கி இருக்கிறது. அந்த அமைப்புக்கு அங்குள்ள தமிழர்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

## நூல் நிலையம்

தமிழ் மன்றம் தனியாக நூல் நிலையம் ஒன்று வைத்திருக்கிறது. அதில் தமிழ்ப் புத்தகங்களே பெரும் பான்மை வகிக்கின்றன. ஆங்கிலப் புத்தகங்கள் இருந்தாலும் அவற்றை எடுத்துப் படிப்பவர்களைவிட தமிழ்ப் புத்தகங்களை வாங்கிப் படிப்பவர்களே அதிகம்.

பிரான்க்பர்ட்டில் இதுவரை தமிழ்ப் புத்தகம் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் அப்படி புத்தகம் எதுவும் வெளியிடுவதாக இருந்தால் அந்தப் புத்தகத்துக்கு வெளியீட்டு விழா செய்து விற்பனை செய்து உதவ தமிழ் மன்றம் தயார் என்று சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறோம்.

## மாணவர் உதவி நிதி

மேற்கு ஜெர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை என்று அமைத்து இலங்கையில் படிப்பைத் தொடர முடியாமல் போன பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி செய்கிறோம். இரண்டு வருடங்களாக இந்த முயற்சியில் ஈடுபட்டு அண்மையில் மூன்று மாணவர்களுக்கு ஜெர்மனியில் பயில நிதி உதவி செய்துள்ளோம்.

மேற்கு ஜெர்மனி அரசாங்கம் அவர்களது கல்வி கட்டணங்களைக் கட்டி விடுகிறது. புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவுகளுக்கு நாங்கள் கடன் உதவி செய்கிறோம். ஒரு மாணவருக்கு ஆயிரம் டாலர் வீதம் மூன்று மாணவர்களுக்கு உதவி செய்திருக்கிறோம்.

## பணத்துக்கு என்ன வழி?

இப்படி பல்வேறு சமூகப் பணிகளையும் மேற்கொள்ள நாங்கள் யாரையும் பிடித்து நிதி உதவி கேட்க முடியாது.

எனவே பலகாரங்கள் விற்று அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமிழை வளர்க்கிறோம்.

அதுபோக பழைய தமிழ்த் திரைப் படங்களை வாங்கி அரங்குகளில் திரையீடு செய்து டிக்கட் மூலம் வசூலாகும் பணமும் ஓரளவு தேறுகிறது.

நான் அக்டோபர் 27 ம் தேதி மேற்கு ஜெர்மனியில் இருந்து தமிழ் நாட்டுக்குப் போனேன். அங்கே பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் தலைமையில் இயங்கும் பன்னாட்டு தமிழர் உறவு கழகம் விருந்தளித்துக் கௌரவித்தது.

இதை எல்லாம் எதிர் பார்த்து நாம் வராவிட்டாலும் இதுபோன்ற கௌரவங்கள் எங்களை மேலும் உச்சாகப் படுத்துகின்றன என்றார் பிராண்க்பர்ட் தமிழ் மறத்தின் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம்.

சிங்கப்பூரில் வந்து ஒரு வார காலம் தங்கி இருந்து பெரியவர் அ. நா. மெய்தீன் புத்தக வெளியீட்டில் கலந்து கொண்ட பின் நேற்றிரவு மீண்டும் மேற்கு ஜெர்மணிக்குப் புறப்பட்டார் திரு பாலசுப்ரணியம்.

நன்றி (முரசொலி பத்திரிகை)

# நிதி உதவி

எமது மன்றத்திற்கு இதுவரை காலமும் எந்த ஸ்தாபனங்களின் மூலமும் எமக்கு எதுவித நிதி உதவியும் கிடைக்காமையால் எமது மன்ற நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு கடனுதவி வழங்கியோர்களின் பெயர்களும் தொகைகளும் பின்வருமாறு:-

| | |
|---|---|
| திரு. பத்மநாதன் | 500,00 |
| திரு. சிவானந்தன் | 300,00 |
| திரு. யசோதரன் | 200,00 |
| திரு. பரஞ்சோதிநாதன் | 300,00 |
| திரு. சொர்ணலிங்கம் | 400,00 |
| திரு. பாலசுப்பிரமணியம் | 300,00 |
| திரு. சிறீபதி | 500,00 |
| திரு. தவராஜா | 300,00 |
| திரு. பாலராஜா | 300,00 |
| திரு. சிவசுப்பிரமணியம் | 300,00 |
| செல்வி. சாவித்திரி | 300,00 |
| திரு. யோகேஸ்வரன் | 300,00 |
| திரு. திருநாவுக்கரசு | 300,00 |
| திரு. குணரட்ணம் | 300,00 |
| திரு. கிருஷ்ணதாஸ் | 500,00 |
| திரு. குலேந்திரன் | 300,00 |
| | 5.400,00 |

மேற்படி கடன் வழங்கியவர்களின் தொகையினை, மன்றத்தின் நிதி நிலைமைக் கேற்ப குலுக்கல் முறையில் திருப்பி வழங்கப்பட்டு வருகின்றது. இதன்படி மார்கழி மாதம் திரு. ஐ. சொர்ணலிங்கம் அவர்களின் கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

தங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் எமது ஆண்டு மலரின் மூலமாக மன்றத்தின் சேவைகளை நன்கு புரிந்து கொண்டு இருப்பீர்கள் என நம்புகின்றோம். மேலும் எமது மன்றத்தின் வளர்ச்சியை மேன்மையடையச் செய்வதற்கு நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் கீழ் கண்ட வங்கிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


NAME OF THE BANK: DRESDNER BANK

ACCOUNT Nr. / KTO. NR.: 551 600 600

BANK NR. / BLZ: 500 800 00



*07.10.1989* இல் "வாணி விழா" வின் போது இடம் பெற்ற திரு. சொர்ணலிங்கத்தின் வில்லிசை நிகழ்ச்சியும், திரு. கேசவன், திரு. குணரட்ணம் ஆகியோரினது புல்லாங் குழல் நிகழ்ச்சியும்.



## வரவு செலவுத் தொகுப்பு - 1989

எமது மன்றத்தின் ஓராண்டு நிறைவு காலத்தில் எம்மால மேற்கொள்ளப் பட்ட வரவு செலவுகளை உங்கள் முன் சமர்ப்பிப்பது எங்கள் தலையாய கடமையாகும். எமது நிர்வாக சபையினரின் சிறந்த நெறிப்படுத்தல் மூலம் கண்டிப்பான நிதிக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தி எம்மால் இயன்ற வரை மன்றத்தின் நிகழ்ச்சிகளை எந்தவித நிதித்தடங்கலும் ஏற்படாது நடாத்தி வந்துள்ளோம். இன்று வரை எம்மால் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுகளைத் தொகுத்து ஓர் திரட்டாக உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

| | வரவு | | செலவு | |
|---|---|---|---|---|
| சாலை மண்டபம் | | | 1950 | 00 |
| போக்குவரத்து | | | 630 | 00 |
| தளபாடம் | | | 830 | 20 |
| ஒலி பெருக்கிக் கருவிகள் கொள்வனவு | | | 4309 | 55 |
| பரிசில் பொருட்கள் | | | 1376 | 73 |
| விளம்பரம் | | | 876 | 34 |
| தமிழ் மாணவர் சேவை கடன் உதவி | | | 1000 | 00 |
| தமிழ் மாணவர் சேவை அன்பளிப்பு | | | 250 | 00 |
| அங்கத்தவர்களின் அன்பளிப்பு | 2100 | 00 | | |
| அங்கத்தவர்களின் சந்தா | 820 | 00 | | |
| நிர்வாக அங்கத்தவர்களின் கடன் உதவி | 5400 | 00 | | |
| நிர்வாக அங்கத்தவர்களின் கடன் செல்மதி | | | 400 | 00 |
| சின்னம் விற்பனை | 81 | 00 | | |
| திரைப்படக் கண் காட்சி வரவு | 2245 | 00 | | |
| சிற்றுண்டி விற்பனை | 1520 | 00 | | |
| மந்திர ஜால நிகழ்ச்சி வரவு | 480 | 00 | | |
| மேள இன்னிசைக் கச்சேரி வரவு | 874 | 00 | | |
| கையிருப்பு | | | 1897 | 18 |
| | 13.520 | 00 | 13.520 | 00 |

தனாதிகாரி
ஒப்பம் - வ. பத்மநாதன்

கணக்குப் பரிசோதகர்
ஒப்பம் - ச. சிவசுப்பிரமணியம்

தமிழ் மன்றத்தின் பார்வையாளர்களின் ஒரு பகுதி.



27.05.1989 இல் நடைபெற்ற திரு. கமலபாதத்தின் நாட்டிய நடன நிகழ்ச்சிக்கு திரு. திருமதி ரஜனி தேவநற்கருணை பரிசில் வழங்குகிறார்கள்.



# கல்வியும் நாமும்

## WEST GERMAN UNIVERSITY TAMIL STUDENTS SERVICE

மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை

"கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய நாம் கற்ற கல்வி எல்லோரும் பெற வேண்டும். இன்புற்று வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கை கருத்திற் கொண்டு எம் தாய்த் திரு நாடாம் ஈழவழநாட்டில் உயர் கல்வியைத் தொடர முடியாது இன்னலுறும் மாணவமணிகள் தமது பல்கலைக் கழகப் படிப்பைத் தொடர, மேற்கு ஜெர்மன் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பயின்று வரும் மாணவர்கள், "மேற்கு ஜேர்மன் பல்கலைக் கழக தமிழ் மாணவர் சேவை என்ற ஓர் அமைப்பை உருவாக்கி தமிழ் மன்றத்தின் உதவியுடன் மாணவர்கள் பட்டப் படிப்பைத் தொடர வழிசெய்து வருகின்றார்கள். மேற்கு ஜேர்மன் பல்கலைக் கழக தமிழ் மாணவர் சேவையானது பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள எம் தமிழ் மக்களின் கல்வியினை சீர் செய்வதையும் உயர் கல்வியைத் தொடரமுடியாது இன்னலுறும் மாணவர்களுக்கு உதவி செய்வதையும் ஒரே நோக்கமாகக் கொண்டு, "மேற்கு ஜேர்மனியில் பல்கலைக் கழகப் படிப்பை எப்படித் தொடர்வது?" என்ற ஓர் சிறந்த வழிகாட்டிக்கை நூலை வெளியிட்டுள்ளார்கள். இவ் வழிகாட்டிச் சேவைக்கு ஏற்படும் நிதி நெருக்கடிக்குத் தமிழ் மன்றம் தோள் கொடுத்து உதவுவதுடன் அவர்களுக்கு வேண்டிய பல உதவிகளையும் முன்னின்று செய்தும் வருகின்றது. அத்துடன் எமது சிறுவர்களுக்கு தமிழ் மொழியையும் வளர்ந்தோர்க்கு ஜேர்மன் மொழியையும் கற்பிப்பதை எமது தலையாய தேவையாகக் கொண்டு ஞாயிறு தோறும் வகுப்புகளை நடாத்தி வருவதும் தெரிந்ததே.

கைநூலைப் பெறுவதற்காக மேற்கு ஜேர்மன் பல்கலைக் கழக தமிழ் மாணவர் சேவையைத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

W.GUTSS,
ND.RAMSTAEDTER STR. 179 A/2,
6100 DARMSTADT
WEST GERMANY.

தமிழ் மன்றச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு 16.11.1989 ஆம் அன்று தமிழ் நாட்டில் "பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தினால்" வழங்கப்பட்ட பாராட்டு விழாவின் போது "தமிழுறவுச் சான்றோர்" எனும் பட்டமளித்தும் பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப்பட்ட காட்சி.



# தமிழ் மன்றம்
## அங்கத்தவர் பட்டியல்

பெயர்

1. சி. நரேந்திரசிங்கம்.
2. க. வரதராஜன்.
3. த. திரவியராய்.
4. செ. சாவித்திரி.
5. இ. ராஜசூரியர்.
6. எம். விக்கிரமன்.
7. ரீ. கிருஸ்ணதாஸ்.
8. க. ரவீந்திரன்.
9. க. ராஜேந்திரன்.
10. த. கலா.
11. ஜே. சிவகுமார்.
12. ச. சிவசுப்பிரமணியம்.
13. பா. பாலசுப்பிரமணியம்.
14. சி. சிறீபதி.
15. என். இரத்தினகுமார்.
16. எம். குணரட்ணம்.
17. ஜ. சொர்ணலிங்கம்.
18. வ. பத்மநாதன்.
19. என். பரம்சோதிநாதன்.
20. ஆர். யசோதரன்.
21. செ. அமலா.
22. எம். ஜெயராயன்.
23. பே. பாலராஜா.
24. செ. கேசவன்.
25. வெ. சந்திரமோகன்.
26. க. ஆனந்தன்.
27. சு. சிவராஜா.
28. செ. அருளானந்தன்.
29. ப. தேவதாஸ்.
30. ஏ. செல்வலிங்கம்.
31. தே. தேவநற்கருணை.
32. எஸ். ச. நாசர்.
33. மு. திருநாவுக்கரசு.
34. தி. நவமணி
35. எஸ். சுந்தரலிங்கம்.
36. எஸ். கனகசபை.
37. சி. நித்தியானந்தன்.
38. எஸ். நரேந்திரகுமார்.
39. செ. தம்பிராசா.
40. பே. தவராசா.

பெயர்

41. க. நடராசா
42. எம். யோகேஸ்வரன்.
43. யி. யோகேஸ்வரன்.
44. வி. சண்முகராசா.
45. கே. சண்முகராசா.
46. எஸ். குலேந்திரன்.
47. செ. ரதி.
48. எஸ். கிருஸ்ணமூர்த்தி.
49. ரீ. அன்ரன் மெக்.
50. வீ. யோகராசா.
51. எஸ். சந்திரமோகன்.
52. தா. நடராசா.
53. செ. கிருஷ்ணசெல்வம்.
54. சி. சிவகுமார்.
55. எம். ஏ. சீ. ஆனந்தராசா.
56. சீ. சிவநேசன்.
57. கே. மகேந்திரன்.
58. வீ. என். அமிர்தலிங்கம்.
59. கே. வீ. காந்தன்.
60. எஸ். பாலச்சந்திரன்.
61. ஆர். ஜெயேந்திரன்.
62. ஜீ. அன்ரனிராய்.
63. வீ. லோகராஜா.
64. க. பாஸ்கரன்.
65. ச. பாரதிதாசன்.
66. சி. சிறீகாந்தா.
67. ஜெ. தேவி.
68. எம். எஸ். மூர்த்தி.
69. ப. தர்மராசா.
70. எம். மனோகரன்.
71. மா. சுதர்சன்.
72. சி. சிறீஸ்காந்தரூபி.
73. த. திரவியநாதன்.
74. நா. சிவானந்தன்.
75. வி. பாலச்சந்திரன்.
76. எஸ். கனகலிங்கம்.
77. க. மகேந்திரராசா.
78. வீ. சச்சிதானந்தன்.
79. சி. கிருபாகரன்.
80. த. வீ. பேரின்பநாதன்.
81. இ. பூபதிதாஸ்.

குறிப்பு:

குடும்பத்தில் ஒருவரின் பெயர்
மட்டுமே அங்கத்தவர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

## அன்பர்களே!

திருமண அழைப்பிதழ்கள், திருமண வாழ்த்து மடல்கள், ஏனைய தமிழ்மொழி ஆக்கங்கள் போன்றவற்றை ஐந்து விதமான அழகு மிகு தமிழ் எழுத்துக்கள் மூலம் விரும்பிய முறைகளில் படங்களுடன் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் கொம்பியூட்டர் மூலம் பிரதிபண்ணப்பட்டுக் கொடுக்கப்படும். மேலதிகத் தொடர்புகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**Karl Schuler Publishing, Untere Bachstr.38, 7470 Albstadt-2**

**Tel: 07432/4997, Telefax: 07432/8591**

தமிழ்த் தொடர்பு **07431/3592**



இருப்பவர்கள் இடமிருந்து வலம்

திருவாளர்கள்
குலேந்திரன்–ஆலோசகர்
பாலராஜா–விளையாட்டுத்துறை
பத்மநாதன்–பொருளாளர்
[illegible]ரட்ணம்– இணைச்செயலாளர்
[illegible]பதி– தலைவர்
சொர்ணலிங்கம்– உபதலைவர்
பாலசுப்பிரமணியம்– இணைச்செயலாளர்
சிவசுப்பிரமணியம்– கணக்குப்பரிசோதகர்
தவராஜா– பத்திராதிபர்

படத்திற்கு சமுகமளிக்காதோர்
திருமதி கமலா கனகசபை
செல்வி சாவித்திரி
திரு மகேந்திரன்

நிற்பவர்கள் இடமிருந்து வலம்

திருவாளர்கள்
யோகேஸ்வரன்– நி. அ.
சிவானந்தன்– நி. அ.
திருநாவுக்கரசு– நி. அ.
பரம்சோதிநாதன்– நி. அ.
சண்முகராஜா– நி. அ.
கேசவன்– நி. அ.
ரவீந்திரன்– நி. அ.
கிருஷ்ணதாஸ்–உபபொருளாளர்
யசோதரன்– நி. அ.
ஜெராயா– நி. அ.
கிருபாகரன்– நி. அ.
சிவகுமார்– நி. அ.

VISIT

**SHRINIVAS KADAGAD - KAI**


***

AEG Aktiengesellschaft
International Market Department
Ressort Asia / Africa / Australia

***

Theodor-Stern-Kai 1
**D-6000 Frankfurt 70**
Tel . (069) 600-5325, Telefax (069) 600-4180, Telex 411076

"கரிதாஸ்" ஸ்தாபனத்தின் மூலம் எமது மன்ற அங்கத்தவர்களுக்கு தமிழ், ஜேர்மன் மொழி வகுப்புக்களை நடாத்துவதற்கு வழங்கப்பட்ட பாடசாலையின் வெளிப்புறத்தோற்றம்.



# . செல்வம் வீடியோ .

★ திருமண வைபவங்கள்,

★ பிறந்தநாள் கொண்டாட்டங்கள்,

★ கலை விழாக்கள் அனைத்தையும்

திறம்பட வீடியோப்படம்

பிடிப்பவர்

**SELVAM VIDEO**

K. THIRUCHCHELVAM
SINEFRAU - 15 A
4620 CASTROP

Tel.:02305 '85945

எமது மன்றத்திலுல் சிறுவர்களுக்காக நடாத்தப்படும் தமிழ் வகுப்பின் ஒரு பகுதியும், பெரியோர்களுக்காக நடாத்தப்படும் ஜேர்மன் மொழி வகுப்பின் ஒரு பகுதியும்.






உங்களுக்கு தேவையான பட்டுப்புடவைகள்
பட்டுவேஷ்டி மற்றும் சிங்கப்பூர் ரெடிமேட்
ஆடைகள் அனைத்தும் மலிவான
விலையில் கிடைக்குமிடம்.........
ஜெயம்
EXPORT & IMPORT
WIESSEN HUTTEN STRASS 39
6000 FRANK FURT / MAIN
தொலைபேசி : 069/234799
(ஃப்ராங்பர்ட் ரெயில் நிலையம் அருகில்)

* அழைப்பிதழ்கள்

* விழாமலர்கள்

* வீடியோ, ஓடியோ லேபல்கள்

மற்றும் உங்களுக்கு தேவையான, அச்சுப்பதிப்பு வேலைகளை திருப்திகரமாக சிறந்த முறையில் செய்ய தொடர்புகொள்ளவும்.

≈ வாமன் ≈

கிறிவன்புறோச். தொலைபேசி 02181/81439

# நன்றி நவில்கின்றோம்

தமிழ்த் தாயின் திருமகளாய்த் திகழும் எம் தமிழ் மன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று ஆதரவும், அயராத உழைப்பும் வழங்கிய எம் அங்கத்தவர்கட்கும், மற்றைய யாவருக்கும் இரவு பகல் பாராது அயராது உழைத்த எம் இனிய நண்பர்கட்கும், எமது மன்றத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகத் தித்திக்கும் சிற்றுண்டிகள் தயாரித்து வழங்கிய சகோதரிகட்கும், வாகன உதவி வழங்கியும், ஒலி, ஒளி சேவையாற்றியும், அரும் பெரும் தொண்டாற்றிய நண்பர்கட்கும், வீடியோ படம் பிடி கருவிகள் மூலம் மன்ற நிகழ்ச்சிகளைப் படமெடுத்த நாம் இன்றும், என்றும் பார்க்கக் கூடியதாகச் செய்த இனிய நண்பர்கட்கும், மாயாஜால வித்தையை மன்றத்தின் சார்பாக நடாத்திய மன்ற நிதி நிலையை உயர்த்த உதவும் அன்பர்கட்கும் நண்பருக்கும், மற்றும் செயலால், மனதால் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எல்லோருக்கும் எமது மன்றம் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகிகள்
தமிழ் மன்றம், பிராங்போர்ட்.

**விமர்சனம்** *(மாத இதழ்)*

*வெளியிடுபவர் :*

**ஆசிரியர் சபா**

*துணை ஆசிரியர்கள் :*

சுந்தரமூர்த்தி *(மேற்கு ஜெர்மனி)*

சுவர்ணா *(பாரீஸ்)*

தஞ்சை சுந்தர் *(இந்தியா)*

*வெளியீட்டு அலுவலகம் :*

VIMERSANAM
MAINZERLAND STR 241
6000 FRANKFURT
**WEST GERMANY.**
Tel. 069-7391104

*சந்தா விபரம் :*

தனி இதழ் 3-50 **DM**

ஆண்டு சந்தா 40 **DM**
*(அஞ்சல் செலவு உள்பட)*

வெளிநாடுகள் ஆண்டு
சந்தா 25 **US** $

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:*

பெயர் : KAITHAKOTTIL
BANK : VOLKS BANK
(FRANKFURT)
BANK NUMBER : **501900 00**
ACCOUNT NUMBER : **77270060**

வாழ்க தமிழ்! வளர்க கலை!!

ஆண்டு விழா சிறப்புடன் நடந்தேற
எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.



# சேகர் ஆட்ஸ்

# SEGAR ARTS

*Commercial Artist.*

*Contact No- 069/4960969*

57, Rückert Strasse 6000 Frankfurt am Main.